திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக குறுவை சாகுபடி நடக்கும், அதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம் என்று சொன்னார்கள்........

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையை ஒத்தி வைக்கக்கோரி அனுமதி கேட்டுத்தான் முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விளக்கம் கேட்டால் போதும்.

திரு. கோ. சி. மணி : விளக்கம்தான் கேட்கின்றேன். சொன்னால் சொல்லட்டும், இல்லாவிட்டால் வேண்டாம். குறுவை நடலாம் என்று சொன்னதால், குறுவை விதை எப்போது, எத்தனை நாட்களில் நடலாம் என்று உத்திரவாதம் கொடுக்க முடியுமா ?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்பதை தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்களே நடவு எப்போது தேவை என்பதை விவசாயிகள் நன்கு அறிவார்கள். எப்போது நடவு செய்தால் நல்லதென்று அவர்கள் கருதுகிறார்களோ, அந்த நாளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு பணியாற்றலாம். அதற்கு இந்த அரசு ஒப்புதல் தருமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியமில்லாததால், தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(2) சென்னை புதுக் கல்லூரியைக் காலவரம்பின்றி மூடிவிடுவதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள புதுக் கல்லூரியை காலவரம்பின்றி மூடிவிடுவதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளதால், ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பினை இழந்து தவிக்கும் நிலைமையைக் கருதியும், கல்வியினுடைய முக்கியத்துவத்தைக் கருதியும் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடக்கும் இந்தப் பிரச்சினை குறித்துப் பேச வேண்டுமென்று என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே நான் முன்மொழிய அனுமதி கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1977 ஜூலை 9]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தீர்மானத்தை முன்மொழிய வேண்டாம். அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க என்ன அவசியமென்று கூறவேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, சென்னை நகரில் நடைபெறுகின்ற புதுக் கல்லூரி நிர்வாகம் நேற்றைய தினம் திடீரென்று அந்தக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்படுமென்று அறிவித்துள்ளது. ஏறக்குறைய 2,000 மாணவர்கள் அந்தக் கல்லூரியில் பயிலுகிறார்கள். அந்தக் கல்லூரி இன்றைக்கு மூடப்பட்டுள்ள காரணத்தால், சென்னை நகரில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் இன்றைக்கு மாணவர்கள் மத்தியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் கோரிக்கை நியாயமானது. நிர்வாகத்தினரே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரியில் அதிகபட்சமான கட்டணம் வசூல் செய்கிறார்கள். அதுவும் சென்னை நகரில் உள்ள பிற கல்லூரிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, புதுக் கல்லூரி நிர்வாகம் வசூலிக்கும் கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது என்று நிர்வாகத்திற்கு மாணவர்கள் மரபுப்படி தூது மூலம் சொல்லியிருக்கிறார்கள். அது தவிர, இன்னும் ஒரு கொடுமையான காரியம் சென்னை நகரக் கல்லூரிகளில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளிலும் நடைபெறுகிறதென்பதை இந்தச் சூழ்நிலையில் சொல்லுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரில், அதிலும் குறிப்பாக புதுக் கல்லூரியில் டொனேஷன் என்ற பெயரால் மாணவர்களிடமிருந்து பணம் பெறப்படுகிறது. எந்தப் பாடத்திற்கு அதிக '' ரஷ் '' இருக்கிறதோ, '' டிமாண்ட் '' இருக்கிறதோ, அந்தப் பாடத்தில் சேர விருப்பமுடையவர்களிடமிருந்து நன்கொடை என்ற பெயரால் கல்லூரி வசூலிக்கிற நிலைமையில் ஈடுபட்டிருக்கிறது. கேட்டால், நாங்கள் பல்வேறு சௌகரியங்களை உருவாக்க வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் எந்தக் கல்லூரி நிர்வாகமும் அனுமதியின்றி நன்கொடை பெறக் கூடாதென்று அறிவித்திருந்தும்கூட, இன்றைக்குப் புதுக் கல்லூரி நிர்வாகம் அதிக பட்சமாக நன்கொடையைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தையும் கூடுதலாக வசூலித்திருக்கிறது. வேறு பல கோரிக்கைகளையும் கோரும் மாணவர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கூடிப் பேசியிருந்தால் நல்ல முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் கல்லூரி நிர்வாகம் கதவடைப்பு செய்திருக்கிறார்கள், தொழிற்சாலைபோல. இந்தக் கல்லூரி உடனடியாகத் திறக்கப்படாவிட்டால், இந்த நோய் பல்வேறு கல்லூரிகளுக்கும் பரவும் ; தமிழகம் முழுவதும் பரவுமென்று கூறி, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை புதுக் கல்லூரி மூடப் பட்டிருப்பது சம்பந்தமாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களைவைத்து நான் இந்த அறிக்கையைத் தருகிறேன். சென்னை புதுக் கல்லூரி யில் 8—7—1977-ல் மாணவர்கள் சில கோரிக்கைகளை எழுப்பிய தாகச் சொல்லப்படுகிறது. மாணவர்களின் கோரிக்கைகளின் மீது கல்லூரி முதல்வர் எடுத்துள்ள நடவடிக்கைகளைப்பற்றிப் பின் னாலே பேசுகிறேன்.

THIRU C. V. RAJAGOPAL: On a point of order, Sir. May I request the Hon. Minister to reply from the Minister's proper place ?

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, அமைச் சர்களுக்கு உரிய இடம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இங்கே அது இல்லை என்பது உண்மை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர் களே, சென்னை புதுக் கல்லூரியில் 8—7—1977-ல் மாணவர்கள் சில கோரிக்கைகளை எழுப்பியதாகவும், அதற்காகக் கல்லூரி நிர் வாகம் எடுத்த நடவடிக்கைகளைக் குறித்தும், இந்த அறிக்கையை உங்கள் முன்னர் வைக்கிறேன்.

கட்டாய நன்கொடை வேண்டாமென்று கேட்டிருக்கிறார்கள். முதல்வர் கட்டாய நன்கொடை வசூலிக்கப்படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். படிப்புக் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கட்டணக் குறைப்பு நிர்வாகத்தினரால் ஆலோசித்துச் செய்யப்பட வேண்டும் ; கல்லூரி நிர்வாகக் குழுவின் செயலர் ஜப்பான் சென்றிருக்கிறார் ; குழுவினர் அனைவரும் விரைவில் கூடி இதுபற்றி முடிவெடுப்பார் களென்று சொல்லியுள்ளார்கள். கல்லூரி மாணவரவைத் தேர்தல் பற்றிக் கேட்டபோது, 8—7—1974-ல் அரசு ஆணை பிறப்பித் துள்ளது ; இது கல்லூரியில் கடைப்பிடிக்கப்படுமென்று முதல்வர் அறிவித்துள்ளார். மாணவர்களுக்குக் கழிவறை வசதிகள் மேலும் செய்து தரப்படவேண்டுமென்று மாணவர்கள் கேட்டுள்ளார்கள். நிர்வாகத்தினர் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவில் புது கழிவறைகள் கட்ட முடிவு செய்துள்ளனர். இன்னும் மூன்று மாதத்தில் இவ் வேலை செய்து முடிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. டென் னிஸ் மைதானம், கூடைப் பந்து மைதானம் செப்பனிடப்பட வேண்டுமென்று மாணவர்கள் கேட்டுள்ளார்கள். செப்பனிடும் பணி விரைவில் மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்துள்ளார்.

1977 ஜூலை 9] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்லூரியின் வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப் படல் வேண்டுமென்று மாணவர்கள் கேட்டுள்ளதற்கு 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இது நடக்கவிருக்கிறதென்று முதல்வர் தெரிவித்திருக்கிறார்கள். சிற்றுண்டி விடுதி ஏற்பாடு செய்யப்படல் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாணவர்கள் சிற்றுண்டி விடுதியின் பாத்திரங்களையும், கண்ணாடி பீங்கான் சாமான்களையும், மேசை நாற்காலிகளையும் பெருமளவில் சேதப்படுத்துவதால், எந்த ஒப்பந்தக்காரரும் சிற்றுண்டி விடுதி நடத்த முன்வரவில்லை. இருப்பினும் இந்த ஆண்டு ஒருவரை சிற்றுண்டி விடுதி நடத்த அமர்த்தியுள்ளோம், இன்னும் இரண்டு நாட்களில் சிற்றுண்டி விடுதி செயல்படுமென்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட குறிப்புரைகளை முதல்வர் மாணவர்களிடையே கூறி அமைதியாக வகுப்பிற்குச் செல்லுமாறு கோரியபோதிலும், மாணவர்கள் பிடிவாதமாக வகுப்புகளுக்குச் செல்லாமல் கல்லூரிச் சொத்துக்களை கல் வீசி சேதம் செய்ய ஆரம்பித்தார்கள். நிர்வாகத்தினர் ஒருவருடைய அம்பாசிடர் காரையும் சேதப்படுத்தினர். சேதங்களின் மதிப்பு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை இருக்கும் என முதல்வர் தெரிவித்திருக்கிறார். சூழ்நிலை மேலும் மோசமடையாமலிருக்க, கல்லூரி மறு தேதி குறிப்பிடப்படாமல் மூடப்பட்டுள்ளதாக முதல்வர் அறிவித்துள்ளார். நிருவாகத்தினருடன் கலந்து பேசி விரைவில் கல்லூரியைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இது குறித்து சபையை ஒத்திவைத்துப் பேச அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கல்லூரி நிர்வாகத்தினுடைய பதிலைச் சொன்னார்கள். இதில், அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன முயற்சியில் ஈடுபட்டிருக்கிறதென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

* திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்ல அனுமதி வேண்டுகிறேன். கட்டணத்தைப் பொறுத்த அளவில், நிர்வாகம் முடிவு செய்ய வேண்டுமென்றும், அமைச்சர் அவர்கள் நிர்வாகக் குழுவின் செயலாளர் வெளியூர் போயிருக்கிறாரென்றும் சொல்லப்பட்டது. கல்லூரி விதிகளின்படி, கட்டணத்தை அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. பி.யூ.சி.க்கு ரூ. 240 ; டிகிரி-க்கு 45 ரூபாய் வீதம் 6 தவணைகள். ஆகவே அந்த உரிமை நிர்வாகத்திற்கு

அளிக்கப்படவில்லை. இதிலிருந்தே நிர்வாகம் வேண்டுமென்றே கோளாறு செய்து கொண்டிருக்கிறதென்பது தெரிகிறது. இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

3. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின் கீழ் மேலவையின் 52-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் :

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. வே. தங்கப்பாண்டியன்.
3. திரு. டி. சந்தோஷம்.
4. திரு. டி. வி. டிமாண்டி.

4. அரசின் சட்ட முன்வடிவு :

தமிழ்நாடு கடன் நிவாரண சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1977).

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Deputy Chairman, Sir, I beg to move .—

" That the Tamil Nadu Debt Relief Laws (Second Amendment) Bill* 1977 (L.A. Bill No. 1 of 1977), passed by the Assembly, be taken into consideration ".

In moving the Bill, I wish to say that liquidation of rural indebtedness is an important welfare measure. By the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Act, 1976 (President's Act 15 of 1976) and the Tamil Nadu Indeleted Persons (Temporary Relief) Act, 1976

* 97 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டிருக்கிறது